உதவி அமர்வு நீதிமன்றம்/சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி.
எஸ்.சி. எண்.204/16

| | | |
|---|---|---|
| பெயர் | .. | முருகன் (அசா7) |
| த/பெ. க/பெ | .. | |
| கிராமம் | .. | |
| தாலுகா | .. | |
| தொழில் | .. | |
| ஜாதி | .. | |
| மதம் | .. | |
| வயது | .. | |

1873ம் வருடத்திய இந்திய சாட்சிய சட்டத்தின் பிரகாரம் 2021 ஆண்டு செப்டம்பர் மாதம் 1ம் நாள் இந்நீதிமன்ற உதவியாளர் அவர்களால் மேற்படியாரிடம் சத்திய பிரமாணம் பெறப்பட்டது.

01.11.2021

**முதல் விசாரணை**

நான் தற்போது பந்தல்குடியில் குடியிருந்து வருகிறேன் . எனது சொந்த ஊர் கோடாங்கிப்பட்டி ஆகும் . நான் ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். 2015ம் வருடம் நான் சொந்த ஊரான கோடாங்கிப்பட்டிக்கு சென்றிருந்தேன். அப்போது மாலை நேரத்தில் போலிசார் அங்கு விசாரித்து கொண்டிருந்தார்க்ள். சாட்சி கையொப்பம் போடும்படி என்னை கேட்டார்கள். அதனால் நான் சாட்சி கையொப்பம் போட்டேன் . என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி கையொப்பம் மட்டும் அசாஆ.2 வாக குறியீடு செய்யப்படுகிறது. எதற்காக கையெழுத்து போட்டேன் என்று எனக்கு தெரியாது.

**(மேற்படி சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பு கு .வி செய்யக்கோரி கேட்கப்பட்ட வேண்டுகோளுக்கு இணங்க அனுமதிக்கப்பட்டது)**

அரசுதரப்பு கு.வி.

நான் கடந்த 23.08.2015 ம் தேதி காலை 10.30 மணியளவில் முத்து ராஜேஸ்வரன் என்பவருடன் ஜமீன் கோடாங்கிப்பட்டியில் நின்று பேசிக்கொண்டிருந்தபோது மாசார்பட்டி காவல் ஆய்வாளர் பொறுப்பு இந்த வழக்கு சம்பந்தமாக சம்பவ இடத்தை பார்வையிட்டு எங்கள் முன்னிலையில் ஒரு பார்வை மகஜர் தயார் செய்தார் என்றும் , மேற்படி பார்வை மகஜரில் நானும் மேற்படி முத்து ராஜேஸ்வரனும் சாட்சி கையெழுத்து போட்டோம் என்றும் , போலீசாரிடம் வாக்குமூலம் அளித்து விட்டு எதிரிக்கு ஆதாரவாக மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒம்/R.இரத்தினவேல் பாண்டியன்,
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.